ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 30.06.2015 |

## 2015 யூனில் பணவீக்கம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07 = 100) 2015 மேயில் 0.2 சதவீதத்திலிருந்து 2015 யூனில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.1 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் 2015 மேயில் 1.9 சதவீதத்திலிருந்து 2015 யூனில் 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 2015 மேயிலிருந்து யூனிற்கு 1.0 சதவீதத்தால் அதிகரித்தது.



கொ.நு.விலைச் சுட்டெணின் மாதாந்த அதிகரிப்பு பிரதானமாக உணவு விலைகளின் அதிகரிப்பினால் ஏற்பட்டது. 2015 யூன் காலப்பகுதியில் சில வகைக் காய்கறிகள், உடன்மீன்கள், பச்சை மிளகாய், சின்ன வெங்காயம், எலுமிச்சம்பழம், பருப்பு, உருளைக்கிழங்கு மற்றும் நெத்தலிக்கருவாடு என்பனவற்றின் விலைகள் அதிகரித்தன. இருப்பினும்கூட, அநேகவகை பழவர்க்கங்கள், தேங்காய், தேங்காய் எண்ணெய், பெரிய வெங்காயம் மற்றும் பயறு என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

உணவல்லா வகைக்குள், ஆடைகள் மற்றும் காலணி; தளபாடங்கள், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டு பேணல்; மற்றும் பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்; ஆகிய துணை வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்ட வேளையில் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; சுகாதாரம்; போக்குவரத்து; கல்வி; மற்றும் தொலைத்தொடர்பூட்டல் மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகிய ஏனைய துணை வகைகளின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன.

பொருளாதாரத்தின் முக்கிய பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 மேயில் 2.6 சதவீதத்திலிருந்து 2015 யூனில் 2.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2015 மேயில் 2.9 சதவீதத்திலிருந்து 2015 யூனில் 2.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.